**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 200/2021</u>**

நாள் 09.07.2025

DW1 – கலாமணி

க/பெ – சாமிநாதன்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of July 2025.)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. வாதிகள் எனது கணவரின் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். 4–ம் பிரதிவாதி எனது மாமியார். வாதிகள் பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அதனால், சொத்து பற்றிய விபரங்கள் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். நான் படிக்கவில்லை. எனது மாமனார் ராமசாமியின் அப்பா பெயர் லட்சுமண கவுண்டர் என்றால் சரிதான். தாவா 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களின் சர்வே எண்.349–ல் உள்ள சொத்தானது வா.சா.ஆ.1 மூலம் லட்சுமண கவுண்டருக்கு பாகமாக வந்த சொத்து என்றால் சரிதான். அந்த சொத்து லட்சுமண கவுண்டரின் பூர்வீக சொத்து என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

2. தாவா 7 முதல் 11 அயிட்ட சொத்துக்களான சர்வே எண்.351–ல் கண்ட சொத்துக்கள் வா.சா.ஆ.3 மூலம் லட்சுமண கவுண்டர் கிரையம் வாங்கிய சொத்து என்றால் அது எனக்குத் தெரியாது. லட்சுமண கவுண்டர் விவசாய தொழில் மட்டும் செய்து வந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை மூலம் பாகமாக வந்த சொத்தில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு தான் தாவா 7 முதல் 11 அயிட்ட சொத்துக்களை வா.சா.ஆ.3 மூலம் லட்சுமண கவுண்டர் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். எனது மாமனார் ராமசாமிக்கு விவசாய தொழில் தவிர வேறு

வேலை கிடையாது என்றால் மின் மோட்டார் மெக்கானிக்காகவும் வேலை பார்த்து வந்தார், விவசாயமும் செய்து வந்தார். எனது மாமனாருக்கும், எனது கணவருக்கும் மெக்கானிக் வேலை செய்து வந்தார்கள் என்பதை எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன். நான் சொல்வது பொய் என்றும் எனது மாமனாரும், எனது கணவரும் மெக்கானிக் வேலை செய்து வந்தார்கள் என்பதை எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் தற்போது தான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மாமனாரும், அவரது சகோதரர் மாரப்ப கவுண்டரும் சேர்ந்து கடந்த 14.06.1963-ம் தேதியிட்ட கிரைய பத்திரம் வா.சா.ஆ.4 மூலம் சர்வே எண். 351/1,3-ல் 1 ஏக்கர் நிலத்தை கிரையம் வாங்கினார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது. அவர்கள் சொத்துக்களைப் பொறுத்து கடந்த 10.02.1982-ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் வா.சா.ஆ.5 மூலம் பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.5-ல் கண்ட சி-செட்டியூல் சொத்து எனது மாமனார் ராமசாமிக்கு சர்வே எண்.348/1-ல் 1 ஏக்கர் மற்றும் 349/1D-ல் பொதுவிடம் சேர்த்து 91-1/2 செண்ட் சொத்துக்களை பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.5-ல் பிதுரார்ஜித வகையிலும், அந்த பிதுரார்ஜித சொத்துக்களில் வந்த வருமானத்தை கொண்டு கிரையம் பெற்ற வகையிலும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிட்டு பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. எனது மாமனார் ராமசாமி 2016-ம் ஆண்டில் இறந்து போய்விட்டார். எனது மாமனாருக்கு பாகமாக வந்த சொத்துக்களை வாதிகளும், எனது கணவரும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால், வாதிகளுக்கு

திருமணம் ஆகும் வரை தான் கூட்டாக அனுபவித்து வந்தார்கள். அதற்கு பிறகு நாங்கள் தான் சொத்தை அனுபவித்து வருகிறோம். வாதிகளுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் எனக்கு திருமணம் நடப்பதற்கு முன்பாகவே 1-ம் வாதிக்கு திருமணம் நடந்து விட்டிருந்தது. 2-ம் வாதிக்கு எனது திருமணத்திற்கு பின்பு தான் சுமார் 4 வருடம் கழித்து திருமணம் நடந்தது. சர்வே எண்.348/1L, 349/1D6 சொத்துக்களை வசந்தி என்பவருக்கு எனது கணவரும், எனது பிள்ளைகள் 2,3 பிரதிவாதிகளும் சேர்ந்து 24.11.2014-ம் தேதியிட்ட கிரைய பத்திரம் வா.சா.ஆ.6 மூலம் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் பிதுரார்ஜித சொத்தை தான் கிரையம் கொடுப்பதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. எனது மாமனார் ராமசாமி எனது கணவர் சாமிநாதன் பெயருக்கு கடந்த 15.03.2010-ம் தேதியில் ஒரு தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த பி.வா.சா.ஆ,2 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதும் பொழுது எனது கணவரும் உடன் சென்றிருந்தார் என்றால் சரிதான். அப்போது எனது மாமனார் ராமசாமி கவுண்டர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருந்து வந்தார் என்றால் சரிதான். அதேபோல் 15.03.2010-ம் தேதியிலேயே ஒரு உயில் சாசனம் பி.வா.சா.ஆ.1-ஐ எனது கணவர் பெயரில் ராமசாமி கவுண்டர் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயில் சாசனத்தில் ராமசாமி கவுண்டரின் மகள்கள் பற்றிய விபரம் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த உயில் சாசனம் எழுதும் போதும் எனது கணவர் எனது மாமனாருடன் சென்றிருந்தார் என்றால் சரிதான். அந்த உயில் பற்றிய விபரம் வாதிகளுக்கு அப்போது தெரியாது என்றால் அது எனக்குத் தெரியாது.

எனது கணவர் வசந்தி என்பவருக்கு சொத்தை கிரையம் கொடுக்கும் போது பி.வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்தைப்பொறுத்து வாதிகளிடம் வா.சா.ஆ.7 பாக விடுதலை ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.7 ஆவணத்திலும் பிதுரார்ஜித சொத்தில் அவர்களுக்கிருந்த பாகத்தை எழுதி கொடுப்பதாக தான் வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் பி.வா.சா.ஆ.1 உயில் சாசனத்தில் கண்ட சொத்தில் வாதிகளுக்கு இருந்து வரும் பாக சொத்தைப் பொறுத்து விடுதலை ஆவணம் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். அந்த பி.வா.சா.ஆ.1 உயில் சாசனத்தின் மூலம் கிடைத்ததாக சொல்லும் சொத்தைப் பொறுத்து எனது கணவர் எனது மகன் 2–ம் பிரதிவாதி சரவணன் பெயருக்கு 12.01.2021–ம் தேதியில் பி.வா.சா.ஆ.4 உயில் சாசனத்தை எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த பி.வா.சா.ஆ.4 உயில் சாசனத்தில் எனது கணவர் அவரது குடும்ப உறுப்பினர்களை குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

5. எனது மாமியார் 4–ம் பிரதிவாதி இந்த வழக்கு மத்தியில் கடந்த 25.10.2022–ம் தேதியில் இறந்து போய்விட்டார் என்றால் சரிதான். அந்த **4–ம் பிரதிவாதி இறப்புச் சான்று நகல் வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்பட்டது. பி.வா.சா.ஆ.1 உயில் சாசனத்தில் 4–ம் பிரதிவாதியின் ஆயுளுக்கு பிறகு சொத்தை என் மகன் சாமிநாதன் அடைய வேண்டியது என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் 4–ம் பிரதிவாதி உயிரோடு இருக்கும் காலத்திலேயே எனது மகன் பெயருக்கு பி.வா.சா.ஆ.4 உயில் சாசனத்தை ஏற்படுத்தி உள்ள நிலையில் அந்த உயில் சாசனம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதியும், நாங்களும் தான் கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்றும், அதனால்

தான் வாதிகள் பெயரும் கூட்டுப்பட்டாதரா்ராக சேர்க்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல, கூட்டுப்பட்டாதாரராக மட்டும் தான் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. எனது மாமியார் 4–ம் பிரதிவாதியை நாங்கள் சரிவர பராமரிக்காமல் விட்டு விட்டதால் எனது மாமியார் திருப்பூர் வருவாய் கோட்டாச்சியரிடம் மனு கொடுத்து விசாரிக்கப்பட்டார் என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு ஆஜராக வேண்டி எங்களுக்கு அறிவிப்பு வந்ததது என்றால் சரிதான். அந்த **10.06.2022–ம் தேதியிட்ட விசாரணை அழைப்பாணை வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்பட்டது. அந்த விசாரணை முடிவில் மாதம் தலா ரூ.2,500/– வீதம் 1,2 வாதிகள் மற்றும் 2–ம் பிரதிவாதியும் மொத்தம் ரூ.7,500/–ஐ 4–ம் பிரதிவாதிக்கு கொடுக்க வேண்டும் என்று உத்தரவு ஏற்பட்டது என்றால் சரிதான். அதன்படி எனது மகன் 2–ம் பிரதிவாதி பணத்தை மணி ஆர்டர் மூலம் அனுப்பினார். அந்த பணத்தை எனது மாமியார் 4–ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டார். அந்த ரசீதை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம். மேற்படி வீதம் 1 மாதம் மட்டும் தான் பணத்தை அனுப்பினோம். ஆனால் அடுத்த மாதத்தில் 4–ம் பிரதிவாதி இறந்து போய்விட்டார். 4–ம் பிரதிவாதி வாதிகளின் பராமரிப்பில் இருந்த போது தான் இறந்து போய்விட்டார் என்றால் சரிதான். உயில் சாசனத்தின் படி 4–ம் பிரதிவாதியை பராமரிக்காததால் தான் அவரை வாதிகள் பராமரித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 அறிவிப்பிற்கு பிறகு தான் வா.சா.ஆ.7 விடுதலை ஆவணத்தை வாதிகளிடம் இருந்து எனது கணவர் எழுதி வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 உயில் சாசனத்தில் வாதிகள் சாட்சி கையொப்பம் எதுவும் போடவில்லை என்றால் சரிதான். எனது மாமனார் பி.வா.சா.ஆ.1 உயில் சாசனத்தை எழுதி வைக்கும் போது எனது மாமியாரை நல்ல முறையில் பராமரிப்பீர்கள் என்ற

நம்பிக்கையில் தான் எழுதி வைத்தார் என்றும், ஆனால் நாங்கள் எனது மாமியாரை பராமரிக்காமல் விட்டு விட்டோம் என்று சொன்னால் சரியல்ல. 6. பி.வா.சா.ஆ.1 உயில் சாசனத்தில் கண்ட சொத்தில் வாதிகளுக்கு உள்ள பாகத்தை அபகரிக்க வேண்டி தான் பி.வா.சா.ஆ.1 உயில் சாசனத்தை எனது கணவர் அவசர கதியில் மோசடியாக தயாரித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அதனால் பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.4 உயில் ஆவணங்கள் செல்லாது என்றும், தாவா சொத்தில் வாதிகளுக்கு உள்ள 2/4 பங்கு சொத்தை பொறுத்து அந்த உயில் சாசனங்கள் கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே வாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமை உள்ள நிலையில் தான் அவர்களிமிருந்து விடுதலை ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளோம் என்றும், அதேபோல் எல்லோரும் சேர்ந்து வசந்தி என்பவருக்கு சொத்தை கிரையமும் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் தாவாவில் கோரிய படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :-** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.07.09 15:42:20 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**